# என் ஜெப வீட்டிலே (உங்களை) மகிழப்பண்ணுவேன், என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 56 : 7

### உனக்கு ஒரு வீட்டை உண்டுபண்ணுவேன்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

பொதுவாக ஒரு வீட்டிற்கு பெரியவர் ஒருவர் வரும்பொழுது, பெற்றோர்களைப் பார்த்து கேட்பார்கள், "இது நமக்கு சொந்தவீடு தானே" என்பதாக. வாலிப பையன்களைக் கண்டுகொண்டால், தம்பிக்கு கல்யாணம் ஆகிவிட்டதா ? என்று கேட்பார்கள். திருமணமான இளம் தம்பதிகளாக இருந்தால், தம்பிக்கு எத்தனை பிள்ளைகள் என்று கேட்பார்கள். வீடு, மனைவி, பிள்ளைகள் என்பது பெரியவர்களின் இலட்சியமாகும்.

இளம் தம்பதியர்கள் ஆசை என்னவாக இருக்குமென்றால், நல்ல பிள்ளைகளைப் பெறவேண்டும், அந்தப் பிள்ளைகளை நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுக்க இப்பொழுதே படிக்க வைக்கவேண்டும். சொந்த வீடு கட்டவேண்டும் என்பதாகும். பிள்ளைகள், மனைவி, வீடு என்பது இளம் தம்பதியர்களின் இலட்சியமாகும்.

நம்முடைய பரிசுத்த வேதாகமமும் இதைத்தான் சொல்கிறது. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். **1 யோவான் 3 : 2.**

ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள். **வெளி. 19 : 7.**

பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லலாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம். **2 கொரி. 5 : 1.**

இதை வாஞ்சையோடு வாசிக்கும் சகோதரனே, சகோதரியே, வீடு, மனைவி, பிள்ளைகள் – என்பது உலக ஆசீர்வாதமாகும்.

பிள்ளைகள், மணவாட்டி, வீடு – என்பது பரலோக ஆசீர்வாதமாகும்.

ஆனால் உலக ஆசீர்வாதத்தோடு நின்றுவிடாதபடி, பரலோக ஆசீர்வாதத்தை நோக்கி, வீரநடை போடுவோம். நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நாம் கழுவப்படும்பொழுது, அவர் நாமத்திலே விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொள்ளும்பொழுது அவருடைய பிள்ளைகளாக மாறுகிறோம். பரிசுத்த கன்னிகையாக இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கப்படும்பொழுது மணவாட்டியாக மாறுகிறோம். அவருடைய இரண்டாம் வருகையிலே, பரலோகத்திலே அவரைத் துதிக்கும் பாக்கியம் பெறுகிறோம். இதுவே நாம் இன்றும் என்றும் அனுபவிக்கப்போகும் பரலோக சந்தோஷமாகும்.

தேவனால் கட்டப்பட்ட, கைவேலையல்லாத நித்திய வீடு, பரலோகத்தில் நமக்கு உண்டு – என்று விசுவாசிக்கிற சகோதரனே சகோதரியே, கர்த்தர் உனக்காக ஒரு நித்திய வீட்டை பரலோகத்தில் உண்டு பண்ணியிருக்கும் பொழுது, நீ கர்த்தருக்காக ஒரு "**ஜெபவீட்டை**" – பூலோகத்தில் உண்டுபண்ணியிருக்கிறாயா ?

நீ கர்த்தருக்காக ஒரு ஜெபவீட்டை பூலோகத்தில் உண்டு பண்ணும் பொழுது, கர்த்தர் உன்னைப் பார்த்து சொல்வார்;

**"என் ஜெப வீட்டில் உங்களை மகிழப்பண்ணுவேன்" – என்பதாக.**

தாவீது கேதுரு மரங்களினால் செய்யப்பட்ட, விலையுயர்ந்த கூடாரத்தில் இருக்கிறான். அப்பொழுது தீர்க்கதரிசியாகிய நாத்தானை நோக்கி, தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவில் இருக்கிறதே என்று கவலைப்படுகிறான்.

**சங். 132 : 1** நான் கர்த்தருக்கு ஒரு இடத்தையும், யாக்கோபில் வல்லவருக்கு, ஒரு வாசஸ்தலத்தையும் காணுமட்டும், தன் வீடாகிய கூடாரத்தில் பிரவேசிப்பதுமில்லை, தன் படுக்கையாகிய கட்டிலின் மேல் ஏறுவதுமில்லை. தன் கண்களுக்கு நித்திரையையும், தன் இமைகளுக்கு உறக்கத்தையும் வரவிடுவதுமில்லை என்று கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபில் வல்லவருக்கு பொருத்தனை பண்ணினான்.

உடனே நாத்தான் தீர்க்கதரிசி மூலம் தாவீதுக்கு கர்த்தர் கீழ்க்கண்டவாறு உரைக்கிறார்.

"இப்போதும் கர்த்தர் உனக்கு வீட்டை உண்டுபண்ணுவார்."

**2 சாமு. 7 : 11**

இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே,

மேற்கண்ட வசனத்தை அப்படியே விசுவாசியுங்கள்.

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, இந்த உலகத்திலே ஜீவித்த நாட்களிலே, நூற்றுக்கு அதிபதி ஒருவனுடைய பிரியமான வேலைக்காரன் வியாதிப்பட்டு, மரண அவஸ்தையாயிருந்தான்.

நூற்றுக்கதிபதி இயேசுவைக்குறித்து, கேள்விப்பட்டபோது, யூதருடைய மூப்பரை இயேசுவினிடத்தில் அனுப்பி, அவர் தன்னுடைய வீட்டிற்கு வந்து தன்னுடைய வேலைக்காரனை சுகப்படுத்த வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். யூதருடைய மூப்பர்கள் இயேசுவினிடத்தில் வந்து இயேசுவைக் கருத்தாய் வேண்டிக்கொண்டு, கீழ்க்கண்டவாறு கூறினார்கள்.

"இயேசுவே, நீர் தயவு செய்கிறதற்கு நூற்றுக்கதிபதி பாத்திரவானாயிருக்கிறான். அவன் நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான். நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான்"– **லூக்கா 7 : 4,5** என்பதாக. அப்பொழுது இயேசு அவர்களுடனே கூடப்போனார். அனுப்பப்பட்டவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, வியாதியாய் கிடந்த வேலைக்காரன் சுகமடைந்திருக்கிறதைக் கண்டார்கள்.

எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே,

உங்கள் பாரம் எதுவாகவும் இருக்கலாம். உங்கள் கவலைகளை மாற்ற தேவன் சித்தமுள்ளவராக இருக்கிறார். உங்களைக் குறித்து, உங்கள் ஊர் மக்கள் சொல்ல முடியுமா ? இவன் ஜீவனுள்ள தேவனுடைய ஜனத்தை நேசிக்கிறான், "தேவனுக்கு ஒரு ஜெபஆலயத்தையும் கட்டினான்" – என்பதாக.

ஆவலோடு வாசிக்கும் சகோதரனே,

ஒருவேளை உனக்கு ஒரு பெரிய "ஜெப ஆலயத்தை" கட்ட முடியாமல் இருக்கலாம். ஆனால் ஆலயமில்லாத கிராமத்தில் ஒரு சிறு "ஜெப வீடு" – கட்ட உதவி செய்யலாமே ?

**கர்த்தர் சொல்கிறார் . . .**

**"என் ஜெபவீட்டில் உங்களை மகிழப்பண்ணுவேன்"** – என்பதாக. தேவன் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**கர்த்தருக்கு ஆலயத்தைக் கட்டுங்கள்**
**அதின் பேரில் நான் பிரியமாயிருப்பேன்**
**அதினால் என் மகிமை விளங்கும்**

தமிழ்நாட்டில் சுவிசேஷத்தில் பின்தங்கிய மாவட்டம் புதுக்கோட்டை. உத்தேசமாக 3300 குக்கிராமங்கள் உண்டு. ஆனால் உத்தேசமாக அதிகபட்சம் 300 ஜெபவீடுகள் உள்ளது. குறிப்பாக, CSI ஆலயம் 3 மட்டுமே உள்ளது. இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்து 2000 வருடமாகியும் 22.10.2004 கணக்குப்படி 3000 குக்கிராமங்களில் எந்தவிதமான ஜெபவீடோ, ஆலயமோ, இல்லை. ஜெபிப்பது யார் ?

**நீங்களும் கர்த்தருக்கு ஒரு ஆலயத்தை கட்டலாமே?**